Praise the Lord:

*கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.*

அவர் நமக்குள்ளே வளர வாஞ்சிக்கிற நம் அனைவரையும் கர்த்தர் ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.

அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்: நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.

உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.

For I know the plans I have for you," declares the LORD, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future. [12] Then you will call upon me and come and pray to me, and I will listen to you. [13] You will seek me and find me when you seek me with all your heart. (NIV) (Jeremiah 29:11-13)

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்: அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

God blesses those whose hearts are pure, for they will see God. (NIV) (Matthew 5:8)

**இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக இருந்து, நாம் அவரை முழு இருதயத்தோடும் தேட, இந்த உலகத்தின் சூழ்நிலைகளும் மாம்சத்தின் இச்சைகளும் தடையாக இருக்கிறதே, ஆண்டவரே என்னை முழுவதுமாக ஆட்கொண்டு, இன்றைய தினத்திலே மேலும் உமது வசனத்தினாலே எனக்கு ஆலோசனை கொடுத்து வழிநடத்தும் என்று தலைகளைத் தாழ்த்தி ஜெபிப்போமாக.**

## Let us Pray

யோவான்/John 3:30 (பக்கம் 128)

கிறிஸ்து பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.

He must become greater and greater, and I must become less and less. (NLT)

(கிறிஸ்துவும் நானும் என்பதைக் குறித்து நாம் தியானித்து ஜெபித்திற்கு கடந்துசெல்வோம்.)

**அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப்போம். . .என்று வேதம் சொல்கிறது.**

சமீப காலத்தில் இப்படி அறிவு மிகவும் பெருகிவருகிறது. பலவித விஞ்ஞானத்தின் வளர்ச்சியைப் பார்க்கிறோம். வேத ஆராய்ச்சிகளின் வளர்ச்சிகளையும் பார்க்கிறோம்.

இந்த அறிவு பெருகியிருக்கும் இந்த காலமானாலும் சரி, இதற்கு முன்புள்ள அந்த காலமானாலும் சரி, கிறிஸ்துவுக்காக தன்னை முழுவதும் அர்ப்பணித்த பலருடைய வாழ்க்கையை நாம் இந்த 2 காலக்கட்டங்களிலும் அறிந்திருக்கிறோம்.

கிறிஸ்துவினுடையவர்களாக ஒரு மனிதன் தன்னை அர்ப்பணித்து வாழ,
அறிவு வளர்ச்சியும் அதனால் கிடைக்கும் உதவிகள் மட்டும் காரணமாகாது.

தனக்குள்ளே வாசம் செய்யும் கிறிஸ்து நம்மிலே ஒவ்வொரு நாளும் பெருகவும், நான் என்ற நமது மாம்சத்தின் சிந்தைகள் ஒவ்வொருநாளும் குறையவும் செய்தால் ஒரு காலக்கட்டத்திலே,

இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். என்ற வசனம் நம்மிலே **பூரணப்படும்**.

*உதாரணமாக ஒன்றை தியானிப்போம்:*

சொற்களின் மிகுதியால் பாவமில்லாமல் போகாது (நீதிமொழிகள் 10: 19)

என்ற வசனத்தை பலமுறை நாம் தேவசெய்தியிலே தியானித்திருக்கிறோம்.

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று கிறிஸ்து நமக்கு சொல்லியிருக்கிறார். (மத்தேயு 12: 36) *என்ற வசனத்தையும் அறிந்திருக்கிறோம்.*

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் **கணக்**கு ஒப்புவிக்கவேண்டும். **(எபி 4:13)** *என்ற வசனத்தையும் அறிந்திருக்கிறோம்.*

இந்த 3 வசனங்களும் வெறும் வார்த்தைகள் அல்ல. இது ஜீவனும் ஆவியாயும் உள்ள கிறிஸ்துவே என்பதையும் அறிந்திருக்கிறோம்.

ஒவ்வொரு நாளும் நான் படுக்கைக்குச் செல்லுமுன், (இங்கு நான் என்று குறிப்பிடுவதை, நீங்கள் ஒவ்வொருவரும் உங்களை வைத்து தியானியுங்கள்.) இன்று நான் சொல்லிய வாயின் வார்த்தைகளை சிந்தித்துப் பார்க்கிறேன். ஆண்டவரே எனது வாயின் வார்த்தைகளுக்கு உம்மிடத்திலே கணக்கு கொடுக்க தகுதிபடுத்தியதற்காக நன்றி. அப்படி தகுதியில்லாத வார்த்தைகள் என்னிலிருந்து வந்திருக்குமானால், அதை எனக்கு உணர்த்தி, நாளையதினம் அதை எடுத்துப் போட்டு, அந்த பாவத்தை என்னிலிருந்து குறையும். அந்த இடத்திலே உமது மகிமைக்குரிய வாயின் வார்த்தைகளாக பெருகட்டும் ஆண்டவரே என ஜெபிக்கிறேன்.

அடுத்த நாள் காலை நான் ஜெபத்தோடு ஆரம்பித்து, கடந்த நாளின் பாவக்கரைகளை நான் அகற்ற வாஞ்சையோடு முயற்சிக்கும்போது கர்த்தர் எனக்கு ஒத்தாசை செயவார்.

ஒவ்வொரு நாளும் தேவநீதிக்கு மாறான வார்த்தைகள் நம்மிலே குறைய குறைய கிறிஸ்துவின் மகிமையான வார்த்தைகள் பெருக பெருக நாம் அவருடைய பரிபூரணத்தை நோக்கி முன்னேறுவோம். அவரை சந்திக்க தகுதியுள்ளவர்களாகும்படி நாம் ஒவ்வொருநாளும் வளர்வோம்.
*(உதாரணத்திற்கு. . நாம் தியானித்தது 3 வசனங்கள் . . . .வேதத்திலே 31000க்கும் மேலான வசனங்கள் உள்ளன.. . . . ஆலோசனையில் ஆச்சரியமானவர் நமது தேவன். . .வேதத்தை மேலும் தியானித்து தியானித்து வளர்வோம். . .ஆமென்.. )*

ஆண்டவரே, எனது பெலவீனத்தை பொருத்தருளும் என்று ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவிடம் ஜெபித்து, **அந்த பெலவீனத்திலேயே** வாழ கிறிஸ்து நமக்கு போதிக்கவில்லை.
நாம் அவருக்குள் புதுசிருஷ்டியாக ஒவ்வொரு நாளும் நம்மை வழிநடத்த அவர் கிருபை உள்ளவர்.
பழையவைகள் ஒழிந்தன. எல்லாம் புதிதாயின என்ற வசனம் நம்மிலே ஒவ்வொரு நாளும் ஜீவிக்கவேண்டும். வளரவேண்டும், பெருகவேண்டும். ஆமென்.

I. "தேவனே! பாவியாகிய எம்மேல் கிருபையாயிரும்" (என்று நாம் நம்மைத் தாழ்த்தி வேண்டும்போது அவர் நமக்கு கிருபையைக் கொடுத்து நம்மை பாவத்திலிருந்து மீட்கிறார். (Lu 18:13)

II. *நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து நம்மிலே வாசம் செய்கிறார். அவரே கர்த்தர். அவரே தேவன் என்று நாம் விசுவாசித்து, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்திலே வளரும்போது, அவர்* நம்மை இரட்சித்து, நீதிமானாக்குகிறார். (ரோமர் 10: 9)

*நாம் அவருக்குள் அவராலே நீதிமானாகிறோம்.*

III. அந்த விசுவாசத்திலே உறுதியாக நிலைத்திருந்து, **மீண்டுமாக பாவத்திலே சஞ்சரிக்காமல்**, அவருடைய கிருபையோடு, பரிசுத்தத்தை நோக்கி முன்னேறும்போது, அவரை நாம் தரிசிக்க தகுதியுள்ளவர்களாக ஆகிறோம். இரட்சிப்பு பூரண நிறைவை அடைகிறது. ஆமென்.

பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே. என்றும் வேதம் சொல்கிறது. எபி 12: 14
கிறிஸ்து பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். He must become greater; I must become less. (NIV)


ஒவ்வொரு நாளும் இந்த வசனம் நமக்குள் ஜீவித்து வளருமானால், நாம் அவரை தரிசிக்கலாம். நாம் மட்டுமல்ல, நம்முடைய உற்றார் உறவினர்கள், நண்பர்கள், இந்த திருச்சபைக்கு அருகிலுள்ளவர்கள் அனைவரோடும் சேர்ந்து அவரை தரிசிக்கலாம். ஆமென்.


மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத். 16:26)
What good will it be for a man if he gains the whole world, yet forfeits his soul? Or what can a man give in exchange for his soul? (NIV)

இந்த உலகத்தில் நான் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன் என்ற மகிழ்ச்சியோடு மட்டும் இருந்து,
நம்முடைய ஆத்மாவை நஷ்டப்படுத்தாதபடி நமது இருதயத்தின் எண்ணங்களும் நினைவுகளும் அவருடைய மகிமைக்காக வளரும்போது, அவர் நம்மிலே பெருகவும் நாம் என்கிற நமது மாம்ச சிந்தைகள் குறையவும் செய்யும்.. . . . *தொடர்ச்சியாக, ஒரு சீராக, ஒரு ஒழுங்காக. . . . . வளர்வோம்.*
முடியவில்லையே என்ற பாரம் இருந்தாலும், என் கிறிஸ்துவாலே என்னாலே செய்யமுடியும் என்ற நம்பிக்கை பெருகட்டும்.

**கீழேயுள்ள 3 விதமான வாழ்கை நிலையை கவனித்துப் பாருங்கள்.**

**Observe these 3 type of our living status.......**




கிறிஸ்து பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். (யோவான் 3:30)

Christ must increase, but I must decrease. (John 3:30) (NKJV)


---

Christ must become greater and greater,
and I must become less and less. (NLT)

---

Christ must become more important while I become less important. (GNB)

---




உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.

**முழு இருதயத்தோடும் கிறிஸ்துவைத் தேட நமது இருதயம் இடம் கொடுக்கிறதா?**

***தியானித்துப் பாருங்கள்.***

கிறிஸ்தவர்கள் எவ்வளவோ வளர்ந்து வருகிறார்கள். பெருகி வருகிறார்கள்.
ஒரு பெரிய மாற்றமாக ஒரு காலக்கட்டத்தை சொல்லவேண்டுமானால்,

15/16வது நூற்றாண்டில் நடந்த ஒரு பெரிய மாற்றம்.
அதாவது வேதமும் பாரம்பரியமும் கலந்து இருந்த கிறிஸ்தவ சூழ்நிலை மாறி
வேதமே முழுமையான அடிப்படை என்ற ஒரு மாற்றம் வந்தது.
Before 16th century the christianity was in the mixup of Bible and Tradition.
After 16th century major reform, it become… "The Bible, the whole Bible, and nothing but the Bible…..".

இந்த 1600 வருட காலக்கட்டங்களிலே பல மக்கள் வேதவார்த்தைகளை தாங்களே தங்கள் தாய்மொழியிலே வாசிக்கவோ, அதை விரிவாக விளங்கிக்கொள்ளவோ போதுமான வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்திருக்கலாம்.

**விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் வேத ஆராய்ச்சிகளின் வளர்ச்சியும்** பெருகிக்கொண்டேயிருக்கும் இன்றைய நூற்றாண்டில், நாம் வேத வார்த்தைகளை நமது தாய் மொழியிலே வாசிக்க மட்டுமல்ல வேத வார்த்தைகளின் மகத்துவத்தை ஆராய்ந்து அறிய எவ்வளவோ விதமான உதவிகள் நமக்கு இன்று உள்ளன.

அன்றைய நாளிலும் சரி, இன்றைய நாளிலும் சரி. . .
கிறிஸ்துவுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து, கிறிஸ்துவின் மகிமைக்காகவே தங்கள் வாழ்க்கையை இறுதிமட்டும் வாழ்ந்தவர்கள். . .. இந்த 2 காலக்கட்டங்களிலும் இருந்ததை, இருப்பதை நாம் அறிகிறோம். அதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.

**எனவே முழு இருதயத்தோடும் அவரைத் தேட,**

**நமக்குள்ள அறிவு வளர்ச்சியே முக்கிய காரணமென்று சொல்லமுடியாது.**
**நமது சூழ்நிலைகள், பாரம்பரியங்கள் ஒரு தடையாக உள்ளன என்றும் சொல்லமுடியாது.**

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் நம்மிலே முழுமையாக ஜீவித்தால்,
எந்தகாலக்கட்டமானாலும் சரி. நம்மிலே கிறிஸ்து மகிமைப்படுவார்.

கிறிஸ்தவர்களுக்குள்,
வேத ஆராய்சிகளின் அறிவு வளர்ந்துகொண்டே போகிறது போல. . ..
தங்களது சுய சிந்தைகளின் காரணமாக வரும் பிரச்னைகளும் வளர்ந்துகொண்டே போகிறது.
இது ஒரு வேதனைக்குரிய சூழ்நிலை. இதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**வாசியுங்கள்**. . . 2 கொரிந்தியர்/2 Corinthians 10:5 (பக்கம் 253)
எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.
we take captive every thought to make it obedient to Christ. (NIV) (2 Cor. 10:5)
**என்ற வசனம் நம்மை ஆட்கொள்ளுமானால். . . .**

கலாத்தியர்/ Galatians 5:24 (பக்கம் 262) (*கெலேசியன்ஸ்*)
கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலா. 5:24)
And those *who are* Christ's have crucified the flesh with its passions and desires. (NKJV)
**என்ற வசனமும் நம்மிலே ஜீவிக்கும். .. . .. அப்போது. .. . .**

யோவான்/John 3:30 (பக்கம் 128)
கிறிஸ்து பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். **என்ற வசனம் நம்மிலே நிலைத்திருக்கும்.**
மீண்டுமாக யோவான் 3:30ஐ வாசியுங்கள். மீண்டுமாக இன்னொருவர் வாசியுங்கள்.
**இந்த வசனம் நம்மிலே 30, 60ஆக வளர்ந்து, 100 ஆக பரிபூரணமடைந்தால். . . . .**
நம்மில் வாழ்பவர் பரிபூரணர். அவருக்குள் நாம் பரிபூரணராகமுடியும். ஆமென்.

*(விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்ற பழைய ஏற்பாட்டு மக்களைவிட நமக்கு விசேஷித்த நன்மையை. . . .)*
*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

தேவனுடைய பிரியத்தை நிறைவேற்ற பிரயாசப்பட அனைவரும் இப்பொழுது எழுந்து ஜெபிப்போம்.

## Let us Pray